**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No.824 /2023**

**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராமசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்துகிருஷ்ணன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கருமடையூர் | வயது | : | 76 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருமடையூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும். இது வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 19.09.2022ம் தேதி, காலை 07.00 மணிக்கு தென்காசி புது பஸ்ஸ்டாப்பில் வைத்து வைத்து எதிரி சாமி என்பவரை என் முன்பும், கணேசன் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், கணேசன் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by
J CHRISTAL
BABITHA
Date: 2025.10.10
13:13:47 +0530